**செய்தி வெளியீடு எண் : 1720** **நாள் : 01.10.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

### <u>நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 95 ஆவது பிறந்த நாள் விழா</u>

நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசன் அவர்கள் குழந்தைப் பருவம் முதற்கொண்டே நடிப்பதில் ஆர்வம் கொண்டு பல்வேறு நாடகங்களில் பங்கேற்று நடித்து வந்தார். இதன் மூலம் "நடிப்பை தனது சுவாசமாகவும், நடிப்பு ஒன்றுதான் தனக்குத் தெரிந்த தொழிலாகவும், நடிப்புதான் தனது தெய்வம்" என்றும் சிவாஜி கணேசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். பேரறிஞர் அண்ணா அவர்களால் எழுதப்பட்ட "சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்" என்கிற நாடகத்தில் மராட்டிய மன்னர் சிவாஜியாக நடித்தார். அவரின் நடிப்புத் திறமையினைக் கண்டு தந்தை பெரியார் அவர்கள் "சிவாஜி கணேசன்" என்று பெயர் சூட்டினார். இத்தகைய பெருமை வாய்ந்த சிவாஜி கணேசன் அவர்கள் 1.10.1927 ஆம் ஆண்டு பிறந்தார்.

சிவாஜி கணேசன் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கதை, வசனத்தில் உருவான பராசக்தி திரைப்படத்தின் மூலம் தமிழ் திரைப்பட உலகில் அறிமுகமாகி 300–க்கும் மேற்பட்ட திரைப்படங்கள், 2 இந்தி படங்கள், 9 தெலுங்கு திரைப்படங்கள் மற்றும் ஒரு மலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார். "நடிகர் திலகம்", "நடிப்புச் சக்கரவர்த்தி" என்று மக்களாலும், திரை உலகத்தினராலும் அழைக்கப்பட்டார். இவர் நடித்த கப்பலோட்டியத் தமிழன், இராஜராஜ சோழன், வீரபாண்டிய கட்டபொம்மன் உள்ளிட்ட பல திரைப்படங்கள் காண்போரின் மனதில் இன்றும் நிலைத்து நிற்கிறது.

உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்ட அற்புத கலைஞன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்பு திறமையை பாராட்டி பத்ம ஸ்ரீ விருது, பத்ம பூஷன் விருது, செவாலியே விருது மற்றும் தாதா சாகிப் பால்கே விருது உள்ளிட்ட விருதுகள் வழங்கப்பட்டன.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு பெருமைச் சேர்க்கும் வகையில் 21.07.2006 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை கடற்கரை காமராசர் சாலையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலை அமைக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் திறந்து

வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து உயர்நீதிமன்ற உத்தரவின்படி அங்கிருந்து மாற்றப்பட்டு, 2017ஆம் ஆண்டு சென்னை, அடையாறு, தேஷ்முக் சாலையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு, அன்னாரது திருவுருவச்சிலை மணிமண்டபத்தின் உட்புறத்தில் நிறுவப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021ஆம் ஆண்டு தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், அடையாறு, தேஷ்முக் சாலையில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபத்தின் உட்புறத்தில் உள்ள அன்னாரது திருவுருவச்சிலையினை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் மணிமண்டப வளாக வெளிப்புறத்தில் அமைத்து தருமாறு நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் குடும்பத்தினர், திரைஉலகினர், அன்னாரின் ரசிகர்கள், பொதுமக்கள் ஆகியோர் கோரிக்கைவிடுத்தனர்.

இக்கோரிக்கையினை ஏற்று, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச்சிலையினை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் மணிமண்டப வளாகத்தில் வெளிப்புறமாக அமைக்கப்பட்டு, அன்னாரது பிறந்த நாளான இன்று (01.10.2022) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in